மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்

முன்னிலை: திரு.பி. ஜெய்சங்கர், பி.ஏ.,எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்
**2024** ம் ஆண்டு ஜனவரி திங்கள் **10** ம் நாள் புதன்கிழமை
CC 35/2023

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | காவல்நிலையத்தின்பெயர்மற்றும்குற்றஎண். | : | அரசுக்காககாவல்உதவிஆய்வாளர்,<br>செம்பட்டிகாவல்நிலையம்,<br>குற்றஎண்.245/2018 | |
| 2) | எதிரிகளின் பெயர் | : | 1. தினேஷ்குமார்<br>த.பெ. தங்கம்<br>இந்து, கூலி<br>வயது 23/2018<br>2. விஜி (எ) விஜயகுமார்<br>த.பெ. ஒச்சாத்தேவர்<br>இந்து, கூலி வயது 23./2018<br>3. பாப்பா<br>கபெ. ஒச்சாத்தேவர்<br>இந்து கூலி<br>வயது 40/2018<br>(அனைவரும்)<br>காமுபிள்ளைசத்திரம்<br>நிலக்கோட்டை தாலுகா<br>திண்டுக்கல் மாவட்டம் | |
| 3) | எதிரிகளின் தந்தைபெயர் | : | | |
| 4) | எதிரிகளின் ஜாதிஅல்லதுஇனம் | : | | |
| 5) | எதிரிகளின் தொழில் | : | | |
| 6) | எதிரியின் முகவரி | : | | |
| 7) | எதிரிகளின் வயது | : | | |
| 8) | குற்றநிகழ்வுநாள் | : | 03.08.2018 | |
| 9) | புகார்தேதி | | 04.08.2018 | |
| 10) | எதிரிகள் கைதுசெய்யப்பட்டநாள் | : | A1 -04.08.2018<br>A2, A3 - Surrender 13.10.2023 | |
| 11) | எதிரிகள் பிணையில்விடுவிக்கப்பட்டநாள் | : | A1- 10.08.2018<br>A2, A3 - Bailed on 13.10.2023 | |
| 12) | விசாரணைஆரம்பிக்கப்பட்டநாள் | | 18.10.2023 | |
| 13) | விசாரணைமுடிக்கப்பட்டநாள் | : | 10.01.2024 | |
| 14) | தண்டனைமற்றும்உத்தரவு | | 1 ஆம் எதிரியின் மீதான சட்டப்பிரிவுகள் 294(b),323, 324, 506(2) இதசவின்படியும், 2, 3 எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 294(b),323, இதசவின் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என முடிவு செய்து எதிரிகளைக் குற்றவாளிகள் இல்லையென்று தீர்மானித்து இவ்வழக்கிலிருந்து மேற்கண்ட எதிரிகளை சட்டபிரிவு 248 (1) | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கு.வி.மு.ச.வின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் சான்றுபொருளாக எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. | |
| 15) | காலதாமத்திற்கானகாரணம் | : | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிப்பதில் காலதாமதம் | |

இந்த வழக்கு 11.01.2023 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் உதவி அரசு வழக்கறிஞர் நிலை I திரு. குமரேசன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர். திருமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் வாதுரைகள் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>தீர்ப்புரை</u>

செம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.245/2018 காவல் உதவி ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) இதசவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்ற செயல் புரிந்துள்ளதாக சட்டப்பிரிவு 173(2) கு.வி.மு.ச-வின் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

**1)** குற்ற இறுதி அறிக்கை**:-**

வாதி கடந்த **2009** ஆம் ஆண்டு தங்கள் ஊரைச்சேர்ந்த விதவைப் பெண்ணான ராமசாமி மகள் தேவி என்பவரை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருவதால் வாதிக்கும்**,** வாதியின் மனைவியின் குடும்பத்தினருக்கும் அவ்வப்போது பிரச்சினை இருந்து வந்துள்ளது**.** இந்நிலையில் கடந்த **03.08.2018** ஆம் ஆண்டு மாலை சுமார் **4** மணியளவில் தங்கள் ஊர் மெயின்ரோட்டில் உள்ள வாதியின் அம்மா பெட்டிக்கடை முன்பு வாதி**,** சுப்பையா**,** அக்கா கவியரசி**,** அக்கா மகன் கோபி வாதியின் அம்மா செல்வராணி ஆகியோருடன் அந்த வழியாக வந்த வாதியின் மனைவியின் உறவினர்களான எதிரிகள் லேட்**.** தங்கம் மகன் தினேஷ்குமார்**,** ஒச்சாத்தேவர் மகன் விஜி என்ற விஜயகுமார் மற்றும் ஒச்சாத்தேவர் மனைவி பாப்பா ஆகிய மூன்று பேரும்**,** வாதி மற்றும் அவரது குடும்பத்தினரைப் பார்த்து ஜாடை**,** மாடையாக போடா தேவிடியா பசங்களா என்று தகாத வார்த்தைகளால் அசிங்கமாகப் பேசி கைகளால் மாறி**,** மாறி அடித்து **1, 2** வது எதிரிகள் தினேசும்**,** விஜியும் அருகில் கிடந்த உருட்டுக்கட்டையை எடுத்து மாறி**,** மாறி அடித்ததில் வாதியின் அக்கா

மகன் கோபி மற்றும் வாதியின் தந்தைக்கு சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், **1** வது எதிரி தினேஷ் ஒழுங்கா இருந்துக்கோங்க என்று கூறி மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்துக்காட்டி இன்னிக்கு தப்பிச்சுக்கிட்டீங்க, என்னைக்கிருந்தாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்ததாகவும், எனவே **1** ஆம் எதிரியானவர் சட்டப்பிரிவுகள் **294(b),323, 324, 506(2)** இதசவின்படியும், **2, 3** எதிரிகள் சட்டப்பிரிவுகள் **294(b),323,** இதசவின்படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக செம்பட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளரால் 30.09.2018 அன்று குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 11.01.2023 அன்று கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகள் பிணையில் இருந்ததால் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிகளுக்கு பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து 13.10.2023 அன்று 1 ஆம் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b),323, 324, 506(2) இதசவின்படியும், 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b),323, இதசவின்படியும் குற்றச்சாட்டு வனைந்து குற்றச் சாட்டுகள் குறித்து விளக்கி கூறப்பட்டது. குற்றச் சாட்டின் சாராம்சம் குறித்து விளக்கி கேட்கப்பட்ட போது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார்கள். எனவே, இவ்வழக்கில் சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

4. அதன் அடிப்படையில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா. 6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும் விசாரணை செய்யப்படவில்லை. அதே போல் எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>**:-**

I) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 ரமேஷ்குமார் என்பவர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது கொடுத்த அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலத்தை இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி தாவீதுஉசேன் என்பவர் பெற்று செம்பட்டி காவல்நிலைய குற்ற எண். 245/2018, சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) இ.த.ச.வின்படி அ.சா.ஆ.2 ஆன முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தது குறித்தும், அன்றையதினமே சம்பவயிடம்

சென்று பார்வையிட்டு, சாட்சிகள் தேவி, சாந்தி ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.3, பார்வைமகஜர் அ.சா.ஆ.4 தயார் செய்து சாட்சிகள் ரமேஷ்குமார், கோபி, சுப்ரியா, செல்வராணி, கவியரசி மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், எதிரி தினேஷ் என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தது குறித்தும், அ.சா.3 மற்றும் அ.சா.4 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து அ.சா.ஆ-5 மற்றும் அ.சா.ஆ-6 காயச்சான்றிதழ்கள் பெற்று சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் புலன்விசாரணை முடித்து அதே சட்டப்பிரிவுகளின் கீழ் 25.05.2018 அன்று நீதிமன்றத்தில் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.6 சாட்சியளித்துள்ளார்.

6. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை:-</u>

1) இவ்வழக்கின் எதிரிகள் வாதி தரப்பினரை அசிங்கமாகப் பேசியும், உருட்டுக்கட்டையால் அடித்து காயத்தை ஏற்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பில் சொல்லப்பட்டு 1 ஆம் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b),323, 324, 506(2) இதசவின்படியும், 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b),323, இதசவின்படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

2) இருதரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டதால், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு குற்றவியல் உதவி வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களில் இருந்தும், 1 ஆம் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b),323, 324, 506(2) இதசவின்படியும், 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b),323 இதசவின்படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறும் வாதிட்டார்.

3). எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 பிறழ்சாட்சியம் அளித்துள்ளதாகவும், இவ்வழக்கின் சான்றாவணங்களான பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவைகளும், சாட்சிகளின் வாக்குமூலங்களும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றும், அரசு தரப்பு தமது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கின் இருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

4). இவ்வழக்கில் அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் ரமேஷ்குமார் என்பவர் எதிரிகள் மீது 2018 ஆம் வருடம் ஒரு தகராறு சம்பந்தமாக அ.சா.ஆ-1 ஆன புகார் கொடுத்ததாகவும், தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும், நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளதாகவும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தன் சாட்சியத்தில் எதிரிகள் தங்களை அசிங்கமாகப் பேசியதாகவோ, வாதிகள் தரப்பினரை தாக்கி காயம் ஏற்படுத்தியதாகவோ, கொலைமிரட்டல் விடுத்ததாகவோ சாட்சியம் அளிக்காத நிலையிலும், அ.சா.2 முதல் அ.சா.5 வரையான சாட்சிகளும் அரசுத்தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர்.

5) மேலும், புகார்தாரர் தரப்பில் எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதாக மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு தள்ளுபடியாகியுள்ள நிலையில், அ.சா.1 ஆன நிகழ்நிலைப்புகார்தாரர் எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டது உறுதியாவதுடன் அ.சா.6 புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாகக் கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசுத்தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் மூலமாக எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது தான் நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என முடிவு செய்து எதிரிகளைக் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

6). முடிவாக, 1 ஆம் எதிரியின் மீதான சட்டப்பிரிவுகள் 294(b),323, 324, 506(2) இதசவின்படியும், 2, 3 எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 294(b),323, இதசவின் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என முடிவு செய்து எதிரிகளைக் குற்றவாளிகள் இல்லையென்று தீர்மானித்து இவ்வழக்கிலிருந்து மேற்கண்ட எதிரிகளை சட்டபிரிவு 248 (1) கு.வி.மு.ச.வின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் சான்றுபொருளாக எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சுருக்கு நேரிடையாக மொழிதல் செய்தும் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று **2023-**ம் ஆண்டு ஜனவரி **10** ஆம் நாள் இந்நீதிமன்ற அவையில் அவையறியப் பகரப்பட்டது.

(Sd.Thiru.P.Jaisankar)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:-</u>

| | |
|---|---|
| அ.சா.1 | ரமேஷ்குமார் ( நிகழ்நிலைப்புகார்தாரர்) |
| அ.சா.2 | கவியரசி |
| அ.சா.3 | கோபி |
| அ.சா.4 | சுப்பையா |
| அ.சா.5 | செல்வராணி |
| அ.சா.6 | பாண்டியராஜன் ( சார்பு ஆய்வளர்) |

<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | முதல்தகவல்அறிக்கை |
| அ.சா.ஆ.3 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.4 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.5 | கோபி என்பவரின் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.6 | சுப்பையா என்பவரின் காயச்சான்றிதழ் |

<u>அரசு தரப்பு சான்று பொருள் ---- இல்லை</u>

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :- ------ இல்லை</u>

## Case summary :-

1) எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் -- இல்லை

2) குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் -- 20.05.2018

3) எதிரிகள் முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் -- 13.10.2023

4) எதிரிகள் மீதான குற்றச்சாட்டை விளக்கி கேட்ட நாள் -- 13.10.2023

5) இடைக்கால மனு விபரம் -- --

6) சாட்சிகள் விசாரணை நாள்

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 – | முதல் விசாரணை | -- | 21.12.2023 |
| | குறுக்கு விசாரணை | -- | 21.12.2023 |
| அ.சா.2 – | முதல் விசாரணை | -- | 21.12.2023 |

| | | | |
|---|---|---|---|
| | குறுக்கு விசாரணை | -- | 21.12.2023 |
| அ.சா.3 – | முதல் விசாரணை | -- | 06.01.2024 |
| | குறுக்கு விசாரணை | -- | 06.01.2024 |
| அ.சா.4 – | முதல் விசாரணை | -- | 06.01.2024 |
| | குறுக்கு விசாரணை | -- | 06.01.2024 |
| அ.சா.5 – | முதல் விசாரணை | -- | 06.01.2024 |
| | குறுக்கு விசாரணை | -- | 06.01.2024 |
| அ.சா.6 – | முதல் விசாரணை | -- | 10.01.2024 |
| | குறுக்கு விசாரணை | -- | 10.01.2024 |

7) எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் விசாரிக்கப்பட்ட நாள் - 10.01.2024

8) எதிரிகள் தலைமறைவாக இருந்த விபரம் -- இல்லை
9) மாண்புமிகு மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் -- இல்லை

(Sd.Thiru.P.Jaisankar)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

<u>குறிப்பு</u>:-
1) விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2) சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3) தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

(Sd.Thiru.P.Jaisankar)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்